**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 172** **நாள் : 02.11.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பெருங்குடி குப்பைக் கொட்டும் வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் தென்மாநிலங்களுக்கான கண்காணிப்புக் குழுத் தலைவர் நீதியரசர் திரு.ஜோதி மணி அவர்கள் இன்று பார்வையிட்டார் !**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலங்கள் 9, 10, 11, 12, 13, 14 மற்றும் 15 ஆகிய பகுதிகளில் சேகரமாகும் குப்பைகள், பெருங்குடி குப்பைக் கொட்டும் வளாகத்தில் கொட்டி சமன் செய்யப்பட்டு வருகிறது. இக்குப்பைக் கொட்டும் வளாகத்தில் மேற்கொள்ளப்படும் மறுசீரமைத்தல், மீட்டெடுத்தல், குப்பை பதனிடுதல் போன்ற திட்டப்பணிகளை கண்காணிக்க 8 உறுப்பினர்களை கொண்ட தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் தென்மாநிலங்களுக்கான கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டது.

தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் தென்மாநிலங்களுக்கான கண்காணிப்புக் குழுத் தலைவர் நீதியரசர் திரு.ஜோதி மணி அவர்கள் தலைமையிலான உறுப்பினர்களை கொண்ட குழு இன்று (02.11.2018) பெருங்குடி குப்பைக் கொட்டும் வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை பார்வையிட்டனர்.

இவ்வாய்வின்போது, தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் தென்மாநிலங்களுக்கான கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மை செயலர் திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., தலைமை இணை சுற்றுச்சூழல் பொறியாளர் திரு.இளங்குமரன், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் திரு.பி.செந்தூர் பாண்டி, தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய உறுப்பினர் செயலர் திரு.டி.சேகர், துணை ஆணையர் (சுகாதாரம்) திரு.மதுசுதன் ரெட்டி, இ.ஆ.ப., தெற்கு வட்டார துணை ஆணையர் திரு.எஸ்.கோபால சுந்தர ராஜ், இ.ஆ.ப., தலைமைப் பொறியாளர் (கட்டிடம்) திரு.என்.மகேசன் உட்பட பலர் உள்ளனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**